பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 23 திங்கட்கிழமை 07.07.2025 கதிர் 240

**இனிது ரகசியம் அல்ல!**

தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தனின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தை கட்சியினரே மறந்துவிட்டார்கள் என்று சமூக ஊடகங்களில் ☞2

# தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் பேரதிர்ச்சியை ஏற்படுத்தும் செம்மணி

## இதுவரையில் 47 அடையாளம்; 44 முழுதாக மீட்பு புதிதாக கிளறிப் பார்த்த இடத்திலும் வெளிவந்தன




செம்மணி மனிதப் புதைகுழி என்று அறியப்படும்பகுதியில்செம்மணிசிந்துப் பாத்தி மயானத்தில் தோண்டுகின்ற இடமெல்லாம்மனிதஎலும்புக்கூடுகள் காணப்படுவது பேரதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது. ஏற்கனவே அகழ்வுப் பணிகள் இடம்பெறும் இடத்திலிருந்து வடகிழக்காக நேற்று ஜேசிபி இயந்தி ரம்மூலம்மேல்படைமண்ணைஅகற்றி யபோது அங்கும் எலும்புக்கூடுகள் வெளிப்பட்டன. இதனை அடுத்து இந்த மனிதப் புதைகுழி மிகப் பெரியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே புதிய இடத்தில் தோண்டிய போது அங்கும் எலும்புக்கூடுகள் காணப்பட்டன.ஏற்கனவேதோண்டப்பட்ட இடத்திலும்பார்க்கபுதியஇடத்திலேயே அதிகளவில் எலும்புக்கூடுகள் ☞2

### மருத்துவத் துறைக்கு

## உள்ளூர் மாணவர்களையும் மீண்டும் ஆட்சேர்க்கிறது கொத்தலாவல பல்கலை

ஜெனரல் சேர் ஜான் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், மருத்துவப் பட்டப்படிப்புக்கு மீண்டும் உள்ளூர் மாணவர்களை கட்டணம் செலுத்தும் அடிப்படையில் சேர்க்க முடிவு செய்துள்ளது.

இந்த ஆண்டு மே 22 அன்று, பாதுகாப்பு துணை அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர, இந்த ஆண்டு முதல், கொத்தலாவல மருத்துவப் பட்டம் கேடட்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு மட்டுமே என்று நாடாளுமன்றத்தில் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இருப்பினும், அந்த முடிவை ☞2

## விபத்துகளால் ஆண்டுதோறும் 12 ஆயிரம் பேர் உயிரிழப்பு

சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு, விபத்துகளால் ஆண்டுதோறும் 10,000 முதல் 12,000 பேர் வரை இறக்கின்றனர் என்று கூறுகிறது.

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 145,000 பேர் இறக்கின்றனர் என்ற மொத்த இறப்புகளில் 8% விபத்துகளால் ஏற்படுவதாகவும் இந்த பிரிவு கூறுகிறது.

பல்வேறு விபத்துகளால் நாடு ஒவ்வொரு மாதமும் சுமார் 1,000 பேரையும், ஒவ்வொரு நாளும் சுமார் 30 பேரையும் இழக்கிறது. ☞3

## புலனாய்வுத் தகவல்களைக் கொடுக்க சீனா, பாகிஸ்தான் நாடுகள் பின்னடிப்பு

### இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்ததால் வந்த விளைவாம்

இந்தியாவுடன்கைச்சாத்திடப்பட்டுள்ளபாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு புலனாய்வு தகவல்களை வழங்குவதை தவிர்க்கின்றன. தனிமனித பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஆளும்தரப்-புக்குக் கற்பிக்க தயாராகவுள்ளோம் என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வகுப்பறையில் அமர வைத்து கற்பிப்பதாக குறிப்பிட்ட அரசாங்கத்துக்கு ☞3

## தேர்தல் முறையைத் திருத்த ஆணைக்குழு வலியுறுத்து

தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட வேண்டும்என்பதைதொடர்ந்துவலியுறுத்துகிறோம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள்ஆணைக்குழுவின்எதிர்கால திட்டமிடல்கள் குறித்து அவரிடம் வினவிய ☞2

## அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மிகச் சொற்ப திட்டங்களே தொடக்கம்

### கட்டுமான சங்கத்தின் தலைவர் குற்றச்சாட்டு

என்பிபி ஆளும்தரப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்காக வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கிய நிதியில் மிக மிகச் சொற்பமான தொகைக்கான ☞2

## பிள்ளையானின் சகாவான இனியபாரதி நேற்று கைது

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானின்நெருங்கியசகாவுமான இனியபாரதி என்றழைக்கப்படும் புஸ்பகுமார் மற்றும் அவரது சகா சசீதரன் தவசீலன் ஆகியோர் நேற்று குற்றப் புலனாய்வுத் ☞2

## நோயளிகளுக்கு தரமான, சத்தான உணவு வழங்குவதில் ஆளும்தரப்பின் கவனம்

அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு தரமான, சத்தான உணவை வழங்குவதற்காக ஒரு சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு முன்னோடித் திட்டத்தை மஹரகம அபேக்ஷா மருத்துவமனையை மையமாகக் கொண்டு தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் அமைச்சில் நடைபெற்றது.

தேசிய புற்றுநோய் மருத்துவமனையின் பணிப்பாளர், நிர்வாகம் மற்றும் இந்த விடயத்துடன் தொடர்புடைய அதிகாரிகள், இலங்கை ஊட்டச்சத்து நிபுணர்களின் கல்வி கலாசாலையைச் சேர்ந்தவர்கள், ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் பிறரின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

நோயாளிகளுக்கு இனிமையான முறையில் சத்தான உணவை வழங்க ☞2

## பாதாளக் குழுக்களின் செயலுக்கும் அரசியல் தரப்புகளுக்கும் தொடர்பு

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

பாதாளக்குழுக்களின்செயற்பாடுகளுக்கும், அரசியல் தரப்பினருக்குமிடையில் தொடர்புண்டு பாதாள குழுக்களின் முக்கிய தலைவர்கள் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்கள் என சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாள குழுக்களுக்கு இடையிலான போதைப்பொருள் வியாபாரத்தின் விளைவாகவே துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகிறது. ஆனால், 2024 செப்டெம்பர் மாதத்துக்குப் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கடுமையான ஒரு விவாதம் கடந்த நாள்களில் போனது. அதை விவாதம் என்பதைவிட வழக்கம் போல வசைபாடல் என்றே சொல்லவேண்டும். வேடிக்கை என்னவென்றால் யாரெல்லாம் சம்பந்தனை தமிழர் தலைவரே இல்லை என்று வசைபாடினார்களோ அவர்களேதான் இப்போது சம்பந்தனை மறந்துவிட்டது கட்சி என்றும் வசைபாடுகின்றார்கள். அவர்களின் கருத்துப்படி சம்பந்தன் தமிழர் தலைவர் இல்லை என்றால், அவரை நினைவுகொள்ளாதது குறித்து அவர்கள் மகிழ்ச்சி அடையாமல் ஏன் இப்படிப் பிதற்றுகிறார்கள் என்றால், அவர்களுக்கு ஒவ்வொன்றையும் விமர்சிக்க வேண்டும் என்கிற வியாதியே தவிர வேறில்லை என்பது தெளிவாகும். அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறார்கள் அவ்வளவுதான். நாய்க்குக் கல்லெறிந்தால் அது காலைத்தான் தூக்கும் என்பதைப் போல சம்பந்தர் காலத்திற்குப் பிறகு சுமந்திரனை தாக்குவதும் வசைபாடுவதும்தான் இவர்களின் தேவை. அதற்குக் கடைசியாக அவர்களுக்குக் கிடைத்தது சம்பந்தனின் நினைவு நாள்.

உண்மை என்னவென்றால் சம்பந்தனின் நினைவு தினம் கட்சியின் திருகோணமலைக் கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்பட்டது என்பதுதான். இருந்தாலும் அது ஒரு மாவட்டக் கிளையின் நிகழ்ச்சியாகத்தான் இடம்பெற்றது. கட்சியின் நிகழ்வாக அல்ல. இதுபோன்ற விடயங்களில் கட்சி இன்னமும் பலவீனமாகத்தான் இருக்கின்றது. கட்சிக் கட்டமைப்பில் காணப்படும் பலவீனமே இதற்கான காரணம். தமிழர்களின் முக்கிய நினைவுநாள்கள் உட்பட தலைவர்களின் முக்கிய நினைவு நாள்கள் வரையில் கட்சியே நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்ற சரியான கட்டமைபு இதுவரையில் கிடையாது.

இதுவரையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே கட்சி நிர்வாகிகளாகவும் இருந்து வந்தார்கள் என்பதால், அவர்களுக்கு வேலைப் பளு அதிகம் என்பது ஒரு காரணமாகக் காட்டப்பட்டு வந்தது. இப்போது அந்த நிலமை மாறிவிட்டது. ஆனாலும் கட்சியின் உள்கட்டமைப்பு பலமடையவில்லை என்பதே சம்பந்தனின் நினைவு தினம் மூலம் தெரியவரும் உண்மை. சம்மந்தன் நினைவாக கட்சியால் எந்தவொரு நினைவுநிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது அதன் உட்கட்டமைப்பு உடனடியாகச் சீராக்கப்பட்டு தேவையான பணிகளை முன்னெடுப்பதற்கான ஆளணிகள் உருவாக்கப்படவேண்டும் என்பதையே வலுவாக உணர்த்துகின்றது.

தேர்தலின்போது மட்டுமே கட்சிப் பணி என்ற நிலைக்கு அப்பால் சென்று கட்சிப் பணி பற்றி தமது உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்துவதும் அவர்களுக்குப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்து கட்சியை கட்டமைக்கவேண்டிய கட்டப்பாட்டை இனியாவது நிறைவேற்றுவார்களா பார்ப்போம்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## தோண்டத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்படக்கூடும் என்று இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

யாழ்ப்பாணம்-செம்மணிசித்துபாத்திஇந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 11ஆவது நாளாக யாழ்ப்பாண நீதிவான் ஆனந்தராஜாவின் முன்னிலையில் தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவா, சட்டவைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் பங்கேற்போடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஏற்கனவே அகழ்வுப்பணிகள் இடம்பெற்று வரும் 3ஆவது தொகுதிப் புதைகுழியிலிருந்து மேலும் இரண்டு எலும்புக்கூடுகள் நேற்றுப் புதிதாக அடையாளம் காணப்பட்டன. அவற்றுடன் சேர்த்து இதுவரையில் 47 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 44 முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அந்தக் குழியைச் சுற்றியுள்ள பகுதிகளைத் துப்புரவு செய்து, மேற்படை மண்ணை ஜேசிபி இயந்திரத்தின் மூலம் கிளறிப் பார்த்தபோது அங்கும் எலும்புக்கூடுகள் காணப்பட்டன. அதனை அடுத்து துப்புரவுப் பணி நிறுத்தப்பட்டது. இன்று அந்த இடத்தில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு அருகில் வேறு புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுத் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்திற்கு ஏற்கனவே அறிக்கையிடப்பட்டிருந்து.

அந்தப் பகுதியில் நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் ஜூலை 2 தொடங்கின.

அந்தப்பகுதியில் ஜூலை 4 அகழ்வின்போது சிறுமியின் ஆடை ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தது. மறுநாள் சனிக்கிழமை மண்டையோடு ஒன்றும் அடையாளம் காணப்பட்டது. அதேசமயத்தில் மூன்றாவது தொகுதியில் தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வந்தன.

நேற்று அரை நாள் மாத்திரமே அகழ்வுப் பணி இடம் பெற்றது. அதனால் மூன்றாவது தொகுதியில் அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளை அகற்றும் பணிகள் மும்முரமாக இடம்பெற்றன. எனினும் எலும்புகளை அகற்ற அகற்ற மேலும் எலும்புக்கூடுகள் அந்தக் குழிக்குள் அடையாளம் காணப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. நேற்றைய அரைநாள் அகழ்வின்போது இரண்டு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதற்கமைய செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 47 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 44 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## பிள்ளையானின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இனியபாரதி திருக்கோவில் வைத்தும் அவரது சகாவான சசீதரன் தவசீலன் மட்டக்களப்பு சந்திவெளியில் வைத்தும் கைதுசெய்யப்பட்டனர். கொழும்பில் இருந்து வந்த குற்றபுலனாய்வு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உதயகுமார் தமிழ் தேசிய கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் உள்ளுராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட வெற்றி பெற்று திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளராக பதவியேற்றார். 2007.0-6.-28 அன்று, விநாயகபுரத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்து திருக்கோவிலுள்ள பிரதேச சபையை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது அவரை விநாயகபுரம், கோரக்களப்பு வீதியில் வைத்து சிலர் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்தனர்.

அவரது மனைவியார் படுகொலை செய்யப்பட்ட தனது கணவருக்கு நீதி கோரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் இந்த விசாரணை கடந்த ஆட்சிக் காலங்களில் கிடப்பில் இருந்து வந்தது.

இதனையடுத்து இந்த முறைப்பாடு தொடர்பாக அவரது மனைவியர் சிஐடியினரிடம் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து அவர்கள் விசாரணையினை மேற்கொண்டுவந்தனர். இந்த வழக்கோடு தொடர்புபடுத்தியே இனிய பாரதியும் அவரது சகாவும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே இவர்களின் தலைவரான பிள்ளையான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

2005 தொடக்கம் 2009 வரை காலப்பகுதியில் திருக்கோவில் மற்றம் விநாயகபுரம் பகுதியில் பலர் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கு இனியபாரதி மீது குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுமக்களின் அடிப்படைவாக்குரிமையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதற்கு அரசமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக செயற்படுகிறோம்.

09 மாதகாலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளுராட்சிமன்றத் தேர்தல் என்று மூன்று தேர்தல்களை சிறந்த முறையில் நடத்தி முடித்தோம். இந்தத் தேர்தல்களில் ஒருசில குறைபாடுகளை அவதானித்துள்ளோம். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களின்போது அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முறையைத் திருத்தவேண்டும் என்று நாடாளுமன்ற தெரிவுக்குழுக்கள், மற்றும் அமைச்சரவை உபகுழுக்களிடம் வலியுறுத்தி பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம்.

தேர்தல் முறைமையில் நாட்டு மக்கள் அதீத கவனம் செலுத்தவேண்டும். தேர்தல் நடக்கிறது. வாக்களித்து விட்டோம் என்ற நிலைப்பாட்டில் பெரும்பாலானவர்கள் உள்ளதை அவதானிக்க முடிகிறது. தேர்தல் முறைமையில் மக்கள் தொடர்ச்சியாக அவதானம் செலுத்தவேண்டும். அப்போதுதான் சிறந்த பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியும் - என்றார்.

## நோயளிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய அவசியம் குறித்து இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் தொடங்கப்படும் இந்த முன்னோடித் திட்டம், எதிர்காலத்தில் நாட்டின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

அரசு மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்காக சுகாதார அமைச்சகம் ஆண்டுதோறும் பெரும் தொகையை செலவிடுகிறது என்றாலும், அந்தப் பணம் நியாயமாக செலவிடப்படுகிறதா என்பது குறித்து கேள்விகள் உள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருத்துவமனை வழங்கும் உணவால் நோயாளி திருப்தி அடைகிறாரா இல்லையா? என்பதைக்கூட எவரும் நோயாளியிடம் கேட்பதில்லை. அவ்வாறானநிலையில் தற்போது வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன. ஆகையால் அரச மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் அவர்களுக்கு உணவளிக்கும் முறை ஆகியவற்றில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்.

குழம்பு மற்றும் காய்கறிகள் கொண்ட ஒற்றை தட்டு இந்த திட்டத்தின் முக்கிய அம்சம். மீன், இறைச்சி போன்றவற்றுடன் கூடிய தட்டுக்குப் பதிலாக சோறு, காய்கறிகள், இறைச்சி அல்லது மீன் என பிரிக்கப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட தட்டில் நோயாளிக்கான உணவு வழங்கப்படும். மேலும், எதிர்காலத்தில் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்த, மருத்துவமனைகளின் சமையலறைகள் நவீனமயமாக்கப்படவேண்டும். தற்போதுள்ள எரிவாயு அடுப்புகளுக்குப் பதிலாக நீராவியால் இயங்கும் அடுப்புகள் மற்றும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதும் அவசியம்.

மருத்துவமனைகளில் உணவு தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை வழங்குவதற்கான ஏலம் மிகக் குறைந்த விலையை வழங்கும் நபருக்கே வழங்கப் படுகிறது. மேலும் மிகக் குறைந்த விலையை வழங்கும் நபரால் மருத்துவமனைக்கு வழங்கப்படும் மூலப்பொருட்களின் தரம் குறித்து சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக மசாலாப் பொருட்களின் தரத்தில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

## அபிவிருத்திக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகள் மட்டுமே இப்போது வரையில் தொடங்கப்பட்டுள்ளன என்று இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் பால் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 500 பில்லியன் ரூபாய் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை, அந்தத் தொகையில் ரூ. 5 பில்லியன் அல்லது அதற்கும் குறைவான தொகைக்குரிய வேலைகள் மட்டுமே தொடங்கப்பட்டுள்ளன என்றார் அவர். இதனால் கட்டுமானத் துறை தொழிலாளர்கள் கடினமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

கட்டுமானத் தொழில் சுமார் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் சரிய வாய்ப்புள்ளது என்று கூறிய அவர், தொழில்துறையைப் பாதுகாப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 500 பில்லியன் மதிப்புள்ள திட்டங்களை உடனடியாகத் தொடங்க வேண்டிய கடமை ஆளும்தரப்பிற்கு உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

பொதுத்துறை திட்டங்களை, குறிப்பாக அரசு அதிகாரிகள் மற்றும் பொறியாளர்களால் திட்டமிடப்பட்டு, பின்னர் கேள்வி அறிவிப்புக்களை அழைக்கும் செயல்முறை மிகவும் மெதுவாக உள்ளது என்றும், இதற்கு முக்கிய காரணம் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் மற்றும் அமைச்சக செயலாளர்கள் அதில் அதிக கவனம் செலுத்தாததுதான் என்றும், அவர்கள் அதற்கான திட்டத்தைத் தயாரிக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த நிலைமை குறித்து நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சர் அனுர கருணாதிலகாவிடம் கேட்டபோது,

தற்போதைய அரசாங்கம் முந்தைய ஆளும்தரப்புக்கள் செயல்பட்ட விதத்தில் செயல்படாததால், இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுபவர்கள் பொறுமையாக இருக்கவேண்டும் என்றார். இந்த ஆண்டு இறுதிக்குள் அந்தப் பணத்தில் 70 சதவீதத்திற்கும் அதிகமானவை திட்டங்களுக்கு செலவிடப்படும் என்றும் அமைச்சர் கூறினார். ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 39.8 பில்லியன் ரூபாய் நீர் வழங்கல் வடிகாலமைப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள நிதி பரிந்துரைக்கப்பட்ட கொள்முதல் நடைமுறையின்படி பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

## பாதாளக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர்தான் இலங்கையின் பாதாள குழுக்கள் தோற்றம் பெற்றதைப் போன்று எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

பாதாளக்குழுக்கள் தொடர்பில் தற்போது ஆளும்தரப்பின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சியினருக்கும் பாதாள குழுக்களுக்கும் இடையில் தொடர்புண்டு. கடந்த காலங்களில் அரசியல் அனுசரணையுடன் பாதாள குழுக்கள் எழுச்சிப் பெற்றன.

பாதாள குழுக்களுக்கும், அரசியல் தரப்பினருக்கும் இடையில் தொடர்புண்டு என்பதற்கு பலசம்பவங்கள் சாட்சியாக உள்ளன. பாதாள குழுக்களின் முக்கிய தலைவர்கள் வெகுவிரைவில் கைது செய்து சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முன்னர் தொடர்ச்சியாகத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றன தேர்தல் இடம்பெற்றதன் பின்னர் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இல்லை. தற்போது ஆட்சியமைக்கும்போது மீண்டும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று எதிர்க்கட்சியினர் அரசியல் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது. பாதாள குழுக்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## உள்ளூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றியமைத்து, 2025/2026 கல்வியாண்டில் கட்டணம் செலுத்தும் அடிப்படையில் மருத்துவப் பட்டப்படிப்புக்கு உள்ளூர் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரப்பட்டிருக்கின்றது.

உள்ளூர் மாணவர்கள் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிட்டு மருத்துவப் படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம், அதற்கான குறைந்தபட்ச தகுதி க.பொ.த. உயர்தரம் ஆகும். உயர்தரத் தேர்வில் உயிரியல் பிரிவில் இரண்டு 'சி' சித்திகளையும் ஒரு 'எஸ்' சித்தியையும் ஒரே அமர்வில் பெற்றிருக்கவேண்டும்.

மருத்துவப் பட்டப்படிப்பில் சேரும் மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பை முடிக்க ரூ. 1 கோடி 75 லட்சம் செலவிடவேண்டும். விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் இந்த மாதம் 18.

காலைக்கதிர் Kalaikkathir

## விபத்துகளால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பே 7,500 முதல் 8,000 க்கும் மேற்பட்ட விபத்து இறப்புக்கள் நிகழ்கின்றன என்று சுகாதார அமைச்சகம் கூறுகிறது.

விபத்துகள் காரணமாக சிகிச்சைக்காக இலங்கையில் உள்ள மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படும் 2,500 முதல் 3,000 நோயாளிகள் ஆண்டுதோறும் இறக்கின்றனர் என்று தொற்றா நோய்கள் பிரிவு கூறுகிறது.

தேசிய விபத்து தடுப்பு வாரம் நாளை (7) முதல் 11 ஆம் தேதி வரை நடைபெறும், மேலும் இதற்காக சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு ஒரு சிறப்பு திட்டத்தை தயாரித்துள்ளது.

அதன்படி, ஜூலை 07 ஆம் தேதி சாலை விபத்து தடுப்பு நாளாகவும், ஜூலை 08 ஆம் தேதி பணியிட விபத்து தடுப்பு நாளாகவும், ஜூலை 09 ஆம் தேதி வீடு மற்றும் முதியோர் இல்ல விபத்து தடுப்பு நாளாகவும், ஜூலை 10 ஆம் தேதி நீரில் மூழ்கி விபத்து தடுப்பு நாளாகவும், ஜூலை 11 ஆம் தேதி பள்ளி, பாலர் பள்ளி மற்றும் பகல்நேர பராமரிப்பு மைய விபத்து தடுப்பு நாளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலனாய்வுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்பு தொடர்பில் நிற்க வைத்து கற்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாதாளக்குழுக்களுக்கும், போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் இடையில் முரண்பாடு அதன் விளைவாகவே துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெறுதாக ஆளும்தப்பு பொறுப்பற்ற வகையில் குறிப்பிடமுடியாது. பாதாள குழுக்களின் செயற்பாடுகளினால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பாதாள குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் குறிப்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. தேசிய பாதுகாப்பு தொடர்பில் அனுபவமுள்ளவர்களை பாதுகாப்பு தொடர்பான விடயதானங்களுக்கு ஜனாதிபதி நியமித்திருக்க வேண்டும்.

அரசாங்கம் இந்தியாவுடன் அண்மையில் பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு தொடர்பில் பல சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் அரசாங்கம் இதுவரையில் அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தவில்லை. இந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தால் பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு புலனாய்வு தகவல்களை வழங்குவதை தவிர்க்கின்றன.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த ஆளும்தரப்பு சகல அயல் நாடுகளுடனும் இணக்கமாகச் செயற்பட வேண்டும். இந்தியாவுக்கு மாத்திரம் சார்பாக செயற்பட்டுக் கொண்டு ஏனைய நாடுகளை பகைத்துக்கொள்ள கூடாது. இந்த ஆளும்தரப்பு இந்தியாவை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படுகிறது - என்றார்.

# இந்த ஆளும்தரப்பின் ஒரே திட்டம் எதிரியை பழிவாங்குவது மட்டுமே

### முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர குற்றச்சாட்டு

மக்களுக்கு நன்மை செய்வதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த என்பிபி ஆளும்தரப்பின் ஒரே திட்டம் தமது அரசியல் எதிரியைப் பழிவாங்குவது மட்டுமே என்று முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.

அரசு ஊழியர்களைக் கைது செய்து, சிறையில் அடைத்து, இடமாற்றம் செய்து ஊடக நிகழ்ச்சிகளை நடத்துவதைத் தவிர, இன்று அவர்கள் முக்கியமான எதையும் செய்வதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

கொழும்பு டார்லி சாலையில் உள்ள இலங்கை சுதந்திரக் கட்சி தலைமையக கேட்போர் கூடத்தில் ஜூலை 2 நடைபெற்ற இலங்கை இலவச சுகாதார சேவைகள் சங்கத்தின் 10ஆவது பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது அமரவீர இவ்வாறு கூறினார்.

இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தபோது அளித்த எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. அதிக அளவில் குறைக்கப்படும் என்று அவர்கள் கூறிய மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைகளும் மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# குளத்தில் மூழ்கி 3 சிறுவர்கள் மட்டக்களப்பில் அநியாயச் சாவு

மட்டக்களப்பு வாகரை கருவப்பன்சேனை குளத்தில் மூழ்கி 3 சிறுவர்கள் நேற்று அநியாயமாக உயிரிழந்துள்ளனர். பெற்றோர் குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் குளக்கரையில் விளையாடிக்கொண்டிருந்த இந்தச்சிறுவர்கள் தவறிவீழ்ந்து உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பனிச்சங்கேணியைச் சேர்ந்த க.சானுஜன் வயது (12) க.டிக்சன் வயது (10), ஜெ.ருக்ஷானா வயது (10) ஆகிய மூன்று சிறுவர்களின் உயிர்களே அநியாயமாகப் பிரிந்துள்ளது.

இவர்கள் மூவரும் பணிச்சங்கேணி திருமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களாவர். உயிரிழந்த மூவரும் குளத்தின் கரையோரத்தில் குழி தோண்டி விளையாடிக் கொண்டிருந்தபோது குளத்தில் காணப்பட்ட பெரும்குழியில் தவறி விழுந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கோடை காலமாததால் குளத்தில் நீர் மட்டம் குறைந்து காணப்படுகிறது. இக்காலங்களில் குளத்தில் மீன் மீடித் தொழில் ஈடுபடுபவர்கள் சிலர் தங்களது குடும்ப சகிதம் அப் பகுதிக்கு சென்று தங்கி நின்று இரவு பகலாக மீன் பிடித் தொழில் ஈடுபட்டு வருவது வழக்கமாகும். இவ்வாறான நிலையிலேயே இச்சம்பவம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரழந்தவர்களின் சடலம் உடற்கூற்றாய்விற்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

# டிரான் அலஸுக்கு கொலை மிரட்டல்

துபாயில் உள்ள ஒரு பாதாள உலகத் தலைவர் தொலைபேசி அழைப்பு மூலம் தன்னைக் கொலை செய்வதாக மிரட்டியதாக முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பதில் ஐஜிபியிடம் தனிப்பட்ட முறையில் புகார் அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதன்படி, பதில் ஐஜிபி ஏற்கனவே இந்த சம்பவம் குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளதாக அறியப்படுகிறது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் பாதாள உலகத் தலைவர்கள் மற்றும் பாதாள உலக உறுப்பினர்களை திருப்பி அனுப்புவதற்கான உத்தரவுகளைக் குறிப்பிட்டு, பாதாள உலகத் தலைவர் அலஸுக்கு பல தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டதாக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

டிரான் அலஸைக் கொலை செய்வதாக ஒரு பாதாள உலகத் தலைவர் முன்னர் மிரட்டல் விடுத்திருந்தார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, டிரான் அலஸின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பாடசாலைகளில் நீச்சல் பயிற்சி அவசியம்

மட்டக்களப்பில் மூன்று சிறுவர்கள் சமீபத்தில் குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்ற செய்தி, வெறும் ஒரு பிராந்தியச்சம்பவமாகஇல்லாமல், நாடுமுழுவதும்பரவியுள்ள ஒரு மௌன அழிவின் கண்ணீரைப் பிரதிபலிக்கிறது. இலங்கையில் வருடந்தோறும் நடைபெறும் நீரில் மூழ்கி உயிரிழக்கும் சம்பவங்கள் ஒரு தேசிய அவலமாகவே மாறி வருகின்றன.

உயிரிழப்புப் புள்ளிவிவரங்களை பார்க்கும்போது, அதுவே ஒரு வலியுணர்ச்சியையும், தவிர்க்கக்கூடிய மரணங்கள் தொடர்பான அரசியல் மற்றும் சமூக மேலோட்டத்தையும் நமக்குக் காட்டுகின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் (நிசூஙிநு) தரவுகளின்படி, இலங்கையில் வருடத்திற்கு சுமார் 800 1000 பேர் வரை நீரில் மூழ்கி உயிரிழப்பது கண்காணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பெருமளவு பாலிகா மற்றும் இளம் வயதுடையவர்களே என்பது மிகுந்த கவலையை ஏற்படுத்தும்.

இவை பெரும்பாலும்:

ஆற்றுகளில்,

குளங்களில்,

கடற்கரைகளில்,

வீட்டுக் கிணறுகளில்,

கிராமப்புற வெள்ளநீர் நிலைகளில்

நடக்கின்றன. பொதுவாக இது ஊராட்சிப் பகுதிகளில் கல்வி மற்றும் பாதுகாப்பு குறைவால் ஏற்படுகின்ற விபத்துகள் ஆகவே அமைகின்றன.

இந்தச் சூழ்நிலையில், மீண்டும் மீண்டும் எழுப்பப்படும் முக்கியமான கேள்வி ஒன்று இருக்கிறது: 'நாம் பள்ளிகளில் ஏன் நீச்சல் பயிற்சியை கட்டாயமாக்க முடியாதா?'

பாதுகாப்பு பற்றிய கல்வி, அடிப்படைத் திறன்கள், உயிர்வாழ்வுத் தேர்ச்சி போன்றவை மாணவர்கள் பள்ளியில் பெற வேண்டிய வாழ்வியல் கற்றல்களின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். ஆனால், இலங்கையின் பாடசாலைகளில் இது பொழுதுபோக்கு வகுப்பாகவே பார்க்கப்படுகிறது.

திறமையான நீச்சல் பயிற்சி இருந்தால், இந்த மூன்று சிறுவர்களின் உயிர்கள் இன்று வாழக்கூடியதாக இருந்திருக்கும்.

இப்போது தொடக்க வகுப்பு முதல் உயர்தர வரையிலான மாணவர்களுக்கு:

அடிப்படை நீர்வாழ்வுப் பயிற்சி,

நீரில் தத்தளிக்கும் நேரத்தில் தற்காப்பு முறைகள்,

பிறரை மீட்பதற்கான முறைகள்

போன்ற அறிவியல் முறையிலான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அதற்காக:

ஒவ்வொரு வலயத்திலும் குறைந்தது ஒரு நீச்சல் கற்றல் மையம் அமைக்கப்பட வேண்டும்.

இடமின்றி உள்ள கிராமப் பகுதிகளுக்குப் பெயர்மாறும் நீச்சல் குளங்கள் (mobile pools) கொண்டு செல்லும் முயற்சி மேற்கொள்ளப்படலாம்.00

நீச்சல் பயிற்சியாளர்களை தயாரித்து, பள்ளிகளில் வாரம் ஒருமுறை பயிற்சி வகுப்புகள் நடத்தப்படலாம்.

இதுபோன்று திட்டமிட்டால் மட்டுமே, ஒரு பசுமையாக வளர்ந்து வரும் சிறுவனின் உயிர், நீரில் வீணாகி விடாத நிலை உருவாகும். அழியத் தேவையில்லாத உயிர்களை நம் பண்பாட்டு மௌனம் அழிக்கட்டாது. இது அரசின் முன்னுரிமைப் பட்டியலில் சேர வேண்டிய ஒரு தேசிய பாதுகாப்புத் திட்டமாக இருக்க வேண்டும்.

பாடசாலைகளில் நீச்சல் என்பது ஒரு விளையாட்டு அல்லது ஆப்ஷனல் பிரிவாக இல்லாமல், வாழ்வியல் பாதுகாப்பு நடவடிக்கையாக உருவாக்கப்பட வேண்டியது தான் இன்றைய அவசியமாகிறது.

நீர் வாழ்க்கையைக் கொடுக்கும்; ஆனால் அதை வாழ்வதற்குத் தேவையான திறனை நாமே பசுமையாக விதைக்க வேண்டியது நம்முடைய சமூகக் கடமை.

# தாய் - கம்போடியா எல்லைத் தகராறு

## மோதலுக்கு மையமான 800 ஆண்டு சிவன் கோவில்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

12 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த இந்து கோவிலான தா மோன் தோம் அமைந்துள்ள நீண்டகால சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதி தொடர்பாக தாய்லாந்துக்கும் கம்போடியாவிற்கும் இடையே மீண்டும் பதற்றங்கள் வெடித்துள்ளன.

தாய்லாந்து மற்றும் கம்போடி யாவிற்கு இடையே எல்லைப் பிரச்சினை நீண்ட காலமாக உள்ளது. இந்தப் பிரச்சினை காரணமாக இரு நாடுகளுக்கு இடையே பதற்றங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன. தாய்லாந்து, கம்போடியாவுடனான நில எல்லையை மூடியுள்ளது. மேலும் இரண்டு நாடுகளின் படையினருக்கும் இடையே மோதல்கள்




தொடர்ந்து ஏற்பட்டுள்ளன.

இந்த எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க, சர்வதேச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. அந்தத் தீர்ப்பின்படி, குறிப்பிட்ட எல்லைப் பகுதி கம்போடியாவிற்கு சொந்தமானது என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும், இந்த தீர்ப்பு இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பதற்றத்தை முழுமையாகத் தணிக்கவில்லை.

தாய்லாந்து மற்றும் கம்போடியா ஆகிய நாடுகள், ஆசியான் அமைப்பின் மூலம் எல்லைப் பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சிகளில்




ஈடுபட்டுள்ளன. இருப்பினும், இந்த முயற்சிகள் முழுமையான பயனளிக்கவில்லை. எல்லைப் பிரச்சனை இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினையாகவே நீடித்து வருகிறது.

நீண்ட கால எல்லைப் பிரச்சனை:

தாய்லாந்துக்கும் கம்போடியா வுக்கும் இடையே 820 கிலோ மீற்றர் நீளமான எல்லை உள்ளது. இதில், பல பழங்கால கோயில்கள் உள்ள பகுதிகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாகப் பிரச்சினை உள்ளது.

ஜூன் மாத இறுதியில் எல்லைப் பகுதியில் இரு நாட்டு ராணுவ வீரர்களிடையே மோதல் ஏற்பட்டது, இதில் ஒரு கம்போடிய வீரர் கொல்லப்பட்டார். பதட்டங்களைத் தணிக்க, தாய்லாந்து அரசாங்கம் கம்போடியாவிற்குடனான நில எல்லையை மூடியுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக, சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் உட்பட அனைவரும் கம்போடியாவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து-கம்போடியா இடையே நீண்ட காலமாக எல்லை பிரச்சினை நிலவி வருகிறது. இதற்கிடையே கடந்த மாதம் எல்லை பகுதியில் இரு நாட்டு ராணுவ வீரர்களிடையே மோதல் வெடித்த பின்னர், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர், இரு நாடுகளும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இரு நாட்டு எல்லை குறித்த நீண்டநாள் சர்ச்சை மீண்டும் தலைதூக்கியுள்ளதை அடுத்து, தாய்லாந்து, கம்போடியா ஆகியவற்றின் அதிகாரிகள் சந்தித்து பதற்றத்தைத் தணிக்க முயன்று வருகின்றனர்.

தாய்லாந்து அரசாங்கம் நிலவரத்தைச் சுமுகமாகத் தீர்க்க முயல்வதாக அந்நாட்டுப்

தொடர்ச்சி 5ம் பக்கம் ..........

# தாய் - கம்போடியா.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

பிரதமர் பெய்த்தொங்தார்ன் ஷினவாத் தெரிவித்தார்.

பல கிலோமீட்டர் நீளமான எல்லையில் பழங்காலக் கோயில்கள் கொண்டுள்ள பல்வேறு பகுதிகள், தெளிவாக வகுக்கப்படாத நிலையில் அவ்விரு நாடுகளுக்குள்ளே எல்லைப் பிரச்சினை பல்லாண்டுகளாக நிலவி வருகிறது.

சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதிகளில் நான்கின் தொடர்பில் கம்போடியா, அனைத்துலக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர உறுதியாக உள்ளது. நீதிமன்றத்தில் இந்தச் சர்ச்சைகளுக்குத் தீர்ப்பை நாட தாய்லாந்து விரும்பவில்லை என்று கவனிப்பாளர்கள் கூறுகின்றனர்.

**கம்போடியாவின் எதிர்வினை:**

தாய்லாந்தின் நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், கம்போடியா, தாய்லாந்து எல்லையில் உள்ள ஏழு மாகாணங்களில் உள்ள அனைத்து நில எல்லை சோதனைச் சாவடிகளிலும் அனைத்து வாகனங்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் நுழைவதைக் கட்டுப்படுத்தியுள்ளது.

தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான எல்லைப்பிரச்சினை,தாய்லாந்து பிரதமர் பெய்த்தொங்தார்ன் ஷினவத்ராவின் அரசாங்கத்திற்கு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது, ஏனெனில் இது தொடர்பாக அவரது ஒரு தொலைபேசி அழைப்பு கசிந்துள்ளது.

இதனையடுத்து தாய்லாந்தில் இருந்து காய்கறி மற்றும் பழங்கள் இறக்குமதி செய்ய கம்போடியா தடை விதித்தது. அதேபோல் தாய்லாந்து திரைப்படங்கள் மற்றும் நாடகங்களை ஒளிபரப்பவும் கம்போடியாவில் தடை விதிக்கப்பட்டது. இதற்கு பதிலடியாக கம்போடியா உடனான எல்லையை தாய்லாந்து மூடி உள்ளது. இதில் மாணவர்கள் மற்றும் மருத்துவ சிகிச்சை பெறுபவர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டு இருப்பதாக தாய்லாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

**சர்வதேச தலையீடு:**

இந்த நான்கின் பகுதிகள் குறித்து தமது நாடு விவாதிக்கத் தயாராக இல்லை என்று கம்போடிய பிரதமர் ஹுன் மானெட் தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் அதிகாரத்துவ கடிதம் ஒன்றையும் அனைத்துலக நீதிமன்றத்திற்கு கடிதம் அனுப்பப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.




போர் நிறுத்தம் செய்ய ஐ.நா. சபை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தாய்லாந்து, கம்போடியா எல்லையில் மீண்டும் சண்டை மூண்டுள்ளதையடுத்து, இரு நாடுகளும் போர் நிறுத்தம் செய்ய முன்வர வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலர் வலியுறுத்தியுள்ளார்.

தாய்லாந்து, கம்போடியா எல்லையில் உள்ள ஆலயம் தொடர்பாக கடந்த சில ஆண்டுகளாகவே இரு நாடுகளிடையே அடிக்கடி சண்டை மூண்டு வருகிறது. இதனையடுத்து போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ள ஐ.நா. பொதுச் செயலர் பிரச்சனையை இராணுவ நடவடிக்கை மூலம் தீர்க்க முடியாது என்றும், தாய்லாந்தும், காம்போடியாவும் தீவிர பேச்சுவார்த்தையில் முடிவு காணவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மோதலுக்கு மையமான 800 ஆண்டு பழமையான சிவன் கோவில்:**

இரு நாட்டு இராணுவ மோதலுக்கு மையமான 800 ஆண்டுகள் பழமையான சிவன் கோவில், தா மோன் கோயில், லேட்டரைட் மற்றும் மணற்கற்களால் கட்டப்பட்ட கெமர் கால சிவன் ஆலயமாகும்.

12 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த இந்து கோவிலான தா மோன் தோம் அமைந்துள்ள நீண்டகால சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதி தொடர்பாக தாய்லாந்துக்கும் கம்போடியாவிற்கும் இடையே மீண்டும் பதட்டங்கள் வெடித்துள்ளன.

கம்போடியா-தாய்லாந்து எல்லையில் உள்ள டாங்க்ரெக் மலைகளில் அமைந்துள்ள இந்தக் கோயில், இரு நாடுகளாலும் உரிமை கோரப்படுகிறது. இது கலாச்சார மற்றும் மத முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது, அதன் பிரதான அறையில் ஒரு புனித சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது.

மே 2025 இல் நடந்த ஒரு கூட்டத்தில் இரு தரப்பினரும் அந்த இடத்தில் தலா ஐந்து வீரர்களாக துருப்புக்களின் இருப்பைக் கட்டுப்படுத்த ஒப்புக்கொண்ட போதிலும், பகைமை விரோதங்கள் மீண்டும் எழுந்துள்ளன.

பிரசாத் தா மோன் தாம் என்றும் அழைக்கப்படும் தா மோன் கோயில், லேட்டரைட் மற்றும் மணற்கற்களால் கட்டப்பட்ட கெமர் கால சிவன் ஆலயமாகும். அதன் அசாதாரண தெற்கு நோக்கிய நுழைவாயில் மற்றும் மலைப்பாதையில் அதன் மூலோபாய இருப்பிடம் அதன் முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது.

நீண்டகாலமாகராணுவபகைமைகள்தொடர்ந்தாலும், கம்போடிய மற்றும் தாய் அதிகாரிகள் கடுமையான வழிகாட்டுதல்களின் கீழ் வருகைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த தளம் ஒரு சுற்றுலா தலமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.









# பரிசோதனையின்றி விடுவிக்கப்படும் கொள்கலன்களுக்கு உரிய நிறுவனங்களின் பெயர்களை வெளியிடவேண்டும்

## முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்து

சுங்கத்தில் இருந்து கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்படும் நடவடிக்கை நீண்டகாலமாக இடம்பெற்று வருவதாகவே விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அதனால் குறித்த வியாபாரிகளின் நிறுவனங்களின் பெயர் பட்டியலை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம் என முன்னிலை சோசலி கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

முன்னிலை சோசலிச கட்சி காரியாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுங்கத்தில் இருந்து பரிசோதனை இல்லாமல் கடந்த ஜனவரி 19,20,21 ஆகிய தினங்களில் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள ஜனாபதிபதியினால் ஜனவரி 30 அமைக்கப்பட்டது. குறித்த குழுவின் அறிக்கை தற்போது சமூகமயமாக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை குறித்த குழுவின் அறிக்கையின் உண்மையான நகல் பிரதிகள் என்பதை ஆளும்தரப்பின் அமைச்சர்கள் பலர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்களில் இருந்து உறுதிப்படுகிறது.

குறித்த அறிக்கையின் பிரகாரம் சுங்கத்தில் ஏற்பட்டிருந்த நெரிசல் நிலைக்கு தீர்வுகாண 3 பேர் கொண்ட குழுவொன்று சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவில் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு குறைந்த பட்சம் 2 பேர் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த 309 கொள்கல்களையும் விடுவிப்பதற்கு ஒரு உறுப்பினர் மாத்திரம் இருந்து தனித்து தீர்மானம் எடுத்திருக்கிறார்.

அந்த கொள்கல்களில் 301 கொள்கலன்கள் சிவப்பு நிற ஸ்டிகர் ஒட்டப்பட்ட, கட்டாயமாக ஸ்கேன் பரிசோதனை மற்றும் பௌதிக பரிசோதனை செய்யப்பட வேண்டிய கொள்கல்களாகும். அதில் 31 கொள்கலன்கள் ஸ்கேன் பரிசோதனை இன்றியே விடுவிக்கப்பட்டுள்ளன. 114 கொள்கலன்கள் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளபோதும் பௌதிக பரிசோதனை செய்யப்படவில்லை. ஏனைய 158 கொள்கல்களும் மஞ்சள் நிர ஸ்டிகர் ஒட்டப்பட்டவைகளாகும்.

அவை சட்டத்தின் பிரகாரம் ஸ்கேன் பரிசோனை செய்யப்பட்டு, அதன் பொருட்களின் மாதிரி பரிசோதனை செய்யப்படவேண்டும். அவற்றில் 13 கொள்கலன்கள் ஸ்கேன் செய்யப்படாமல் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 55 கொள்கலன்கள் ஸ்கேன் செய்யப்பட்டபோதும் மாதிரி பரிசோதனை செய்யப்படவில்லை. இந்த தீர்மானம் சுங்க கட்டளைச்சட்டம் மற்றும் சுங்கத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மீறும் நடவடிக்கை என விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு இதற்கு முன்பும் பரிசோதனைகள் இன்றி கொள்கலன்கள் வடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் பல் சந்தர்ப்பங்களில் 2218 கொள்கலன்கள் பரிசோதனை இன்றி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 999 சிவப்பு ஸ்டிகர் ஒட்டப்பட்ட கொள்கலன்கள் என்கதுடன் சஞ்சள் ஸ்டிகர் ஒட்டப்பட்ட 1218 கொள்கலன்கள் இருந்துள்ளதாகவும் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தமுறை விடுவிக்கப்பட்டுள்ள 309 கொள்கலன்களின் உரித்துடைய இறக்குமதியாளர்கள் 65 பேருக்கும் இதற்கு முன்னரும் இந்த சலுகை கிடைத்துள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியில் ஆளும்தரப்பு இந்த மோசடியின் பொறுப்பை அதிகாரிகள் மீது சுமத்தி தப்பிக்கொள்வதுடன் எதிர்க்கட்சி அரசாங்கத்தின் அரசியல்வாதிகளுக்கு மோசடி குற்றச்சாட்டு தெரிவிப்பதே இடம்பெறும். நீண்டகாலமாக இந்த மோசடி செயலை மேற்கொண்டுவரும் வியாபாரிகள் விடுதலையாகின்றனர். இந்த வியாபாரிகளை மறைத்து பாதுகாப்பதற்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் உத்தியோகபூர்வமற்ற இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு வருவதாகவே தெரிகிறது.

எனவே இந்த மோசடி வியாபாரிகளை வெளிப்படுத்தி அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதனால் குறித்த வியாபாரிகளின் நிறுவனங்களின் பெயர் பட்டியலை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என நாங்கள் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுகின்றோம் என்றார்.

சுங்கத்தில் இருந்து கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்படும் நடவடிக்கை நீண்டகாலமாக இடம்பெற்று வருவதாகவே விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இந்த வியாபாரிகளை மறைத்து பாதுகாப்பதற்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் உத்தியோகபூர்வமற்ற இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு வருவதாகவே தெரிகிறது. அதனால் குறித்த வியாபாரிகளின் நிறுவனங்களின் பெயர் பட்டியலை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டாவின் மக்கள் ஆணையை பஸில் கொள்ளயடிதது போன்று அநுரவின் மக்கள் ஆணையை ரில்வின், பிமல் ஆகியோர் கொள்ளை

## முன்னாள் எம்.பி. பட்டாலி ரணவக்க தெரிவிப்பு

கோட்டபய ராஜபக்சவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை பஸில் ராஜபகச கொள்ளையடித்ததை போன்று அநுரகுமார திசநாயக்கவுக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை ரில்வின் சில்வா, பிமல் ரத்நாயக்க ஆகியோர் கொள்ளையடித்துள்ளார்கள். இதன் பெறுபேற்றை வெகுவிரைவில் ஆளும்தரப்பு விளங்கிக்கொள்ளும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டு கடன் சுமையினால் நாடு நிதியியல் ரீதியில் வங்குரோத்து நிலையடைந்தது. 1987ஆம் ஆண்டு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை காட்டிலும் வெளிநாட்டுக் கடன் தொகை உயர்வாக காணப்பட்டது.

அப்போதைய பிரதமராக பதவி வகித்த ரணசிங்க பிரேமதாச இதற்குப் பொறுப்புக்கூறியிருக்க வேண்டுமா அல்லது மக்கள் விடுதலை முன்னணி நாடளாவியரீதியில்முன்னெடுத்தவன்முறைகளுக்குப் பொறுப்புக்கூறியிருக்க வேண்டுமா என்பதை ஆராய வேண்டும்.

2002 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தில் ஏற்பட்ட பாதிப்பு பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டுமா அல்லது விடுதலை புலிகளின் தாக்குதலினால் அரச நிர்வாக கட்டமைப்புக்கு ஏற்பட்ட பாதிப்புக்குப் பொறுப்புக்கூற வேண்டுமா என்பதையும் ஆராயவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 2007 ஆம் ஆண்டு 8.6 சதவீதத்தில் 500 மில்லியன் டொலர் கடன் பெறும்போது அதன் விளைவை எவரும் ஆழமாக ஆராயவில்லை. போர் முடிவடைந்ததன் பின்னர் பெரும் அபிவிருத்திகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டுக் கொண்டு அரச நிதியே பெருமளவில் மோசடி செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை அரசியல் பரப்புரையாக்கி கோட்டபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தார்.கோட்டாவுக்கு வழங்கிய ஆணையை பஸில் ராஜபக்ச கொள்ளையடித்தார். நாடு மிக மோசமான நெருக்கடிக்குள்ளானது, பின்னர் கோட்;டபய ராஜபக்சவை நாட்டு மக்கள் விரட்டியடித்தார்கள்.

அரசியல் கட்டமைப்பின் மீது நாட்டு மக்கள் கொண்டிருந்த வெறுப்பை சாதகமாகப் பயன்படுத்தி அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிப் பெற்றார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் கொள்ளையடித்துள்ளார்கள்.இதன்பலனை ஆளும்தரப்பு வெகுவிரைவில் விளங்கிக்கொள்ளும்.

தேசிய மற்றும் சர்வதேச அரசமுறை கடன்களை செலுத்துவதற்கு ஆளும்தரப்பிடம் எவ்விதமான புதிய திட்டங்களும் கிடையாது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்று நாட்களை கடத்துவதை மாத்திரம் ஆளும்தரப்பு பிரதான பொருளாதார கொள்கையாக கொண்டுள்ளது - என்றார்.

# கரடியனாறு விபத்தில் 7 வயது சிறுவன் சாவு

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உறுகாமம் பகுதியில் பஸ் மோதியதில் ஏழு வயதுச் சிறுவனான கவிசேக் உயிரிழந்தான்.

நேற்றுக் காலை தாயும் இரு பிள்ளைகளுமாக (வயது 07 மற்றும் 11) மகோயாவுக்கு சென்று பிற்பகல் 1.00 மணியளவில் அங்கிருந்து மீண்டும் பஸ்ஸில் உறுகாமம் வந்து இறங்கும்போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. முதலில் 07, வயதுடைய மகனை இறக்கி வீதியோரம் நிறுத்திவிட்டு, மற்றய பெண் (11) பிள்ளையை இறக்குவதற்காக தாய் பஸ்ஸினுல் ஏறியபோது, வீதியோரமாக நின்ற மகன் பேருந்துக்கு முன்பாக சென்று வீதியை கடந்து செல்ல ஓடுகையில், பின்னால் வந்த தனியார் பஸ் ஒன்றுடன் மோதி படுகாயமடைந்தான். அவனை கரடியனாறு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். மேலதி சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான். ஆனால் செல்லும் வழியில் ஏறாவூர் பிரதேசத்தில் அவனது உயிர் பிரிந்தது. இதனால் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.











இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.07.2025இல் வெளியிடப்பெற்றது